# தமிழ் - இடைநிலைக் கல்வி (237)

## (அக மதிப்பீடு) **Tutor Marked Assignment** **(2023-24)**

மொத்த மதிப்பெண்: 20

குறிப்பு:

(1) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களின் அருகிலும் அதற்கான மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) விடைத்தாளின் முதல் பக்கத்தில் பெயர், பதிவு எண், தாளின் பெயர் போன்றவற்றை எழுதுதல் வேண்டும்.

---

1. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2
   (அ) வீரசேனனுக்குப் பிள்ளைவரம் அளித்த வரலாறு குறித்து எழுதுக. (பாடம் 12)
   (ஆ) தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை எழுதுக.. (பாடம் 32)

2. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2
   (அ) மகன் தந்தைக்கு எழுதுவதுபோல் கடிதம் வரைக. (பாடம் 14)
   (ஆ) விடுமுறை கேட்டு விண்ணப்ப கடிதம் எழுதுக. (பாடம் 31)

3. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2
   (அ) செண்பகாதேவி அருவி குறித்து எழுதுக. (பாடம் 16)
   (ஆ) கோக்கர்ஸ் நடைபாதை குறித்து எழுதுக. (பாடம் 15)

4. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4
   (அ) இந்தியாவில் காந்தியின் போராட்டம் மற்றும் காந்தியின் தனித்தன்மை குறித்து எழுதுக. (பாடம் 17)
   (ஆ) கீழே உள்ள பகுதியினைச் சுருக்கி வரைக. (பாடம் 18)

   தமிழர் பண்பாடு

   தமிழர்தம் வழிபாட்டு முறைக்கு மலர்களையும் மாலைகளையும் இயற்கை வனப்பையும் பயன்படுத்தி வந்தனர். மலர்களால் வழிபடும் முறை திராவிடச் சிறப்பு முறை எனக் கூறுவாருமுலர். ஐவதிக வழிபாட்டில் மலர் வழிபாடு இல்லை என்பதும், ஆரியர் திராவிடமிருந்தே மலர் வழிபாட்டு முறையைக் கற்றனர் என்பதும், அவர் துணிபு. பூஜை என்னும் வடசொல் பூ செய் என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு என்பாருமுளர். அதற்குத் தக்க

சான்றுகளும் உள. பூ வழிபாடு வேதகாலத்தில் ஆசிரியர்கண் இன்மையாலும் பூஜை எனும் அடிச்சொல் ஆரியத்தில் தவிரப் பிற இந்தோ - ஐரொப்பிய மொழிகளில் காணாமையாலும் புஷ்ப கர்ம பூஜை திராவிட மக்களின் தனிப்பண்பாட்டிற்கு இசைந்தது என நம்புதற்கு இடமுண்டு. மேலும் மலர்கட்கும், மரங்கட்கும் தமிழில் உள்ள பெயர்கள் இன்னோசை உடையவை. வெர்ஜில் எனும் இலத்தீன் புலவர் மலர்ச்செடிகளின் பெயரைக் கொண்டு இன்னோசை படைத்த பல அடிகள் யாத்துள்ளனர் என்ப. தமிழ்ப் புலவரும், தமிழ்ப் பெயர்களைக் கொண்டு செவிக்கினிய பல அடிகள் யாத்துள்ளனர்.

5. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4

(அ) சங்க இலக்கியத்தில் இயற்கை குறித்து கட்டுரை வரைக. (பாடம் 18)

(ஆ) இந்தியப் பண அஞ்சல் படிவத்தை நிறைவு செய்யும் முறைகளை விவரி. (பாடம் 30)

6. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 500 சொற்களுக்கு மேல் விடையளிக்க. 6

(அ) தஞ்சை மராட்டிய மன்னர் பரம்பரை மூத்த இளவரசரைப் பேட்டி கண்டு எழுதியமை போல் எழுதுக. (பாடம் 33)

(ஆ) பின்வரும் பாடலைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க. (பாடம் 35)

உனைக்காணும் போதினிலே என்னுள்ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுதுதற்கு
நினைத்தாலும் வார்த்தை கிடைத்திடு வதில்லை
நித்திய தரித்திரராய் உழைத்துழைத்து
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின் நிலவே! உனைக் காணும் இன்பம் தானோ?

- பாரதிதாசன்

(அ) உழைத்திடும் மக்கள் வாழும் நிலை - - - - - -

(ஆ) பசித்த மக்கள் தம் வயிற்றுக்குத் தேடுவது - - - - - -

(இ) நிலவைக் காணும் போது ஏற்படுவது - - - - - - -

---------------